வகுப்பு : 10

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி - 2024

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I (மதிப்பெண்கள்:15)

குறிப்புகள்: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதவும்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக. 15X1=15

1. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும் – சீர்மோனைச் சொற்களைத் தேர்க.
அ) நாடி – முறைசெய்யா ஆ) நாள்தொறும் – மன்னவன்
இ) நாள்தொறும் – முறை ஈ) நாள்தொறும் – நாடி

2. பழமொழிகளைப் பொருத்துக.
அ) ஆறில்லா ஊருக்கு – 1. சோற்றுக்கு ஒரு சோறு பதம்
ஆ) உப்பில்லாப் பண்டம் – 2. நூறு வயது
இ) நொறுங்கத் தின்றால் – 3. குப்பையிலே
ஈ) ஒரு பானை – 4. அழகு பாழ்
அ) அ – 4, ஆ – 1, இ – 3, ஈ – 2 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1
இ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3 ஈ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2

3. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

4. ஒழுக்கம் விழுப்பம் ------ ஒழுக்கம்
------ ஓம்பப் படும் – திருக்குறளின் விடுபட்ட சீர்களைத் தேர்க.
அ) ஒழுகல், எய்துவர் ஆ) எப்பொருள், எல்லாம் இ) மயக்கம், கொளல் ஈ) தரலான், உயிரினும்

5. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி – இச்செய்யும் அடியில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயரின் தமிழ் எண்ணைத் தேர்க.
அ) க000 ஆ) ங00 இ) அ00 ஈ) எ000

6. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி –
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

7. 'கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்' ஜெயகாந்தனின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது ---------
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார் ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

8. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

9. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

10. பெயரெச்சத் தொடரைத் தேர்க.
அ) இனியன் கவிஞர் ஆ) குயில் கூவியது இ) அன்பால் கட்டினார் ஈ) கேட்ட பாடல்

11. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் –
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

*"உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;*
*இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்*
*வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்*
*வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!*
*பண்டோர் கம்பன், பாரதி, தாசன்*
*சொல்லா தனசில சொல்லிட முனைவேன்"*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


12. பாடலின் ஆசிரியர்
அ) கண்ணதாசன் ஆ) பாரதிதாசன் இ) வண்ணதாசன் ஈ) பாரதியார்
13. கவிஞருக்கு உவமையாகக் கூறப்பட்டதைத் தேர்க.
அ) வண்டு ஆ) காற்று இ) அன்னம் ஈ) மழை
14. பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களைத் தேர்க.
அ) தருவேன், தட்டுவேன் ஆ) உண்டா, வண்டா
இ) இல்லா, இல்லம் ஈ) சொல்லா, சொல்லிட
15. பாடல் இடம்பெற்றுள்ள கவிதையின் பெயர் ------
அ) ஞானம் ஆ) காலக்கணிதம் இ) பூத்தொடுத்தல் ஈ) சித்தாளு

பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4X2=8
**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.
17. கரப்பிடும்பை இல்லார் – இத்திருக்குறள் தொடரின் பொருளை எழுதுக.
18. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.
அ) ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
ஆ) முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.
19. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
21. 'குன்றேறி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.
அ) நீரில் செல்வது பட– .........
ஆ) பறவையிடம் இருப்பது இ–கு .........
இ) மன்னனிடம் இருப்பது வா– .........
ஈ) தங்கைக்கு மூத்தவள் அ–கா .........
உ) அறிவின் மறுபெயர் ம– .........
ஊ) சிவப்பு நிறத்தில் இருப்பது கு–தி .........
23. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக?
24. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25. எதிர்மறையாக மாற்றுக. அ) மீளாத் துயர் ஆ) அருகில் அமர்க
26. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்ப்பாடுகளையும் எழுதுக.

| | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

27. ஒலித்து – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
28. கலைச்சொற்கள் தருக. அ) Cabinet ஆ) Storm

குறிப்பு : **செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**
**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**
அ) நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும் –
ஆ) ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம் –

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சங்கப்பாடல்களின் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்று பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்று இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசன் அறநெறியில் ஆட்சிசெய்வதற்கு அமைச்சரும் உதவினர் என்றும் பாடப்பட்டுள்ளது.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

வினாக்கள்:

அ) அரசன் எதனைப் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும்?

ஆ) அரசனின் அறநெறி ஆட்சிக்கு யார் உதவினார்?

இ) அரசனின் கடமையாக இலக்கியங்களில் சொல்லப்பட்டிருப்பதைக் குறிப்பிடுக.

30. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில் நுட்பம்'என்ற தலைப்பில் எழுதுக.

31. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' – இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தினை பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**
**வினா எண் 34–கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2X3=6

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது – இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'சிறுதாம்பு' எனத் தொடங்கி 'நன்மொழி கேட்டனம்' என முடியும் முல்லைப்பாட்டு.

(அல்லது)

ஆ) 'தூசும் துகிரும்' எனத் தொடங்கி 'கூல வீதியும்' என்று முடியும் சிலப்பதிகாரப் பாடல்.

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

35. பின்வரும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு காண்க.
தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

36. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. *கண்ணே கண்ணுறங்கு!*
*காலையில் நீயெழும்பு!*
*மாமழை பெய்கையிலே!*
*மாம்பூவே கண்ணுறங்கு!*
*பாடினேன் தாலாட்டு!*
*ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!*

– இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38. அ) பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகளை யாவை?

(அல்லது)


ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

39. அ) வாழ்த்து மடல் (நண்பனுக்குக் கடிதம்)
மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் பழுதான மின்கம்பங்கள், மின்விளக்குகள், மின்கம்பிகள் மின் இணைப்புப்பெட்டிகள் போன்றவற்றைச் சரிசெய்து தருமாறு மின்வாரிய அலுவருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

41.காமராசர் நகர், பெரியார் தெரு, விருத்தாசலம் – 10 என்ற முகவரியில் வசிக்கும் தமிழ்வேந்தன் என்பவரின் மகள் பூந்தளிர், அரசு உயர்நிலைப்பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10 ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை பூந்தளிராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42.அ) வானொலி அறிவிப்பு

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது....மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பதாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

ஆ) மொழிபெயர்க்க.

**Malar:** Devi, switch off the lights when you leave the room.
**Devi :** Yeah. we have to save electricity.
**Malar:** Our nation spends a lot electricity for lighting up our streets in the night.
**Devi :** Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
**Malar:** I have read some other countries are going to launch these types of illuminations satellites near future.
**Devi :** Superb news! we lauch artifical moons, they can assist im disaster relief by beaming light on areas that lost power!

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள் முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

வினாக்கள்:

1. மொழிபெயர்ப்பின் பயன் யாது?
2. மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவதன் காரணம் யாது?
3. மொழிபெயர்ப்பு ஏற்படுத்தும் முக்கியத் தாக்கத்தைக் குறிப்பிடுக.
4. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை எவ்வாறு அறியலாம்?
5. இலக்கியத்தை எவ்வாறு வளப்படுத்தலாம்?

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43.அ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்களை – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

(அல்லது)

ஆ) காற்று பேசியதைப் போல நிலம் பேசுவதாக எண்ணிக்கொண்டு விவரித்து எழுதுக.

44.அ) அன்னம்மா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

ஆ) இராமானுஜர் நாடகம் வழியாக வெளிப்படும் மனிதநேயம் சார்ந்த அறக்கருத்தை விவரித்து எழுதுக.

45.அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்டதென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து பரணிபாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து அந்தாதிகூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி, அழகூட்டி அக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) 'போதை இல்லாப் புதுஉலகைப் படைப்போம்' என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – பரவலான போதைப் பழக்கம் – போதைப் பழக்கத்திற்கான காரணங்கள் – போதைப் பழக்கத்தின் விளைவுகள் – விடுபடும் வழிமுறைகள் – விழிப்புணர்வுப் பரப்புரைகள் – நமது கடமைகள் – முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும்:

1. மாணவர்/ மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்றுமொழியும் :

மாணவ / மாணவியின் கையொப்பம்

Padasalai.Net